# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ).

******

முறையீட்டு மனு எண்: 06/மா/2019
ஆணை நாள்: 09–05–2019

**31.12.2018 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் செய்தி .** --- தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 13,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**
**சென்னை.** --- எதிர் மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, ஈக்காட்டுத்தாங்கல் சிட்கோ தொழில் பேட்டைக்குள் இயங்கும் இரண்டு தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் திறந்தவெளி ஒதுக்கீடு (O.S.R.) நிலத்தினை மேற்படி நிறுவனங்கள் ஆக்கிரமித்து பூங்கா அமைத்து உபயோகித்து வருகின்றன என்றும், அதனை மீட்டு பூங்கா அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குமாறு 31.12.2018 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழில் வெளியான செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து, முறையீட்டு மனு எண்.06/2019 என எண்ணிடப்பட்டு சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டல அலுவலரிடம் அறிக்கை பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

<u>ஆணை:</u>

பெருநகர சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டலம், ஈக்காட்டுத்தாங்கல், சிட்கோ தொழில்பேட்டையில் இயங்கும் இரண்டு தொழில் நுட்ப நிறுவனங்கள், திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) நிலத்தினை மேற்படி கம்பெனிகள் ஆக்கிரமித்து பூங்கா அமைத்து உபயோகித்து வருகின்றன என்றும், அதனை மீட்டு பூங்கா அமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குமாறு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிக்கைச் செய்தி குறித்து அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டல அலுவலருக்கு 11.01.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டல அலுவலர் தனது 04.02.2019 நாளிட்ட அறிக்கையில் ஒலிம்பியா டெக்பார்க் நிறுவனத்தின் பகுதியில் அமைந்துள்ள திறவிடம் (OSR) நிலம் ஒலிம்பியா டெக் பார்க் நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், இத்திறவிடம் (OSR) சம்மந்தமாக M/s. எவரெடி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No.22167/2010ன்படி வழக்கு தொடரப்பட்டு, மேற்படி வழக்கில் தற்போதைய நிலையே தொடர வேண்டும் (Status Quo) என்று தடையாணையினை 29.09.2010 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு 08.01.2019 அன்று விசாரணைக்குப் பட்டியலிடப்பட்டு தொடர்ந்து நிலுவையில் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மேலும், 13-வது மண்டல அலுவலர் தனது அறிக்கையில் மற்றுமொரு திறவிடத்தில் அமைந்துள்ள பூங்கா, தாமரை டெக் பார்க் நிறுவனத்தின் உட்பகுதியில் அமைந்துள்ளதென்றும், அதனுள் செல்வதற்கு ஒரு சிறிய வழி கதவு வைத்து பொது வழியாக உள்ளதென்றும், அப்பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதென்றும் மற்றும் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ள தென்றும், அவ்வாக்கிரமிப்புகளை அகற்ற சிட்கோ நிர்வாகத்திற்கு கடிதம் எழுதி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டல அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. M/s. எவரெடி தொழிற்சாலை (M/s. Eveready Industries) நிறுவனத்தால் தொடரப்பட்டுள்ள W.P. No.22167/2010 வழக்கினைத் தொடர்ந்து கண்காணித்து முடிவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், தாமரை டெக் பார்க் நிறுவனத்தின் உட்பகுதியில் உள்ள பூங்காவினுள் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மேற்படி பூங்காவினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர விரைந்து உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுமாறும், அதன் விபரத்தினை அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் 13-வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு, மே திங்கள் 9-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
மண்டல அலுவலர்
**மண்டலம் – 13,**
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையார்,
**சென்னை – 600 020.**

**2. ஆணையர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் மாளிகை,**
**சென்னை.**

**நகல்**
**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு 3**
**இ. கோ. / உதரி**